**செய்தி வெளியீடு எண்.215** **நாள்.18.3.2008**

தற்போது ஆட்டோரிக்ஷா வாகனங்களில் 3 பயணிகளை மட்டும் ஏற்றிச்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. 14 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியரை ஏற்றிச்செல்வது குறித்து விதிகளில் குறிப்பிடப்படவில்லை. இதனால் மூன்று எண்ணிக்கைக்கு மேல் சிறுவர் சிறுமியர்களை ஏற்றிச்செல்லும்போது தணிக்கை அதிகாரிகள் வாகனத்தில் அதிகபாரம் ஏற்றிச்செல்வதாக வழக்கு பதிவுசெய்கின்றனர். எனவே, இதுகுறித்து பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

2. பொதுமக்களின் மனுக்களை அரசு பரிசீலித்து தமிழக அரசு அரசாணை எண் 328, உள் (போக்குவரத்து 5) துறை, நாள் 7.3.2008–ல் தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 1989, பிரிவு 309–க்கு திருத்தம் வெளியிட்டுள்ளது.

3. இதன்படி, பயணிகள் ஆட்டோரிக்ஷா வாகனங்களில் 3 பயணிகள் அல்லது 14 வயதிற்குட்பட்ட 5 குழந்தைகளை ஏற்றி செல்லலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. எனவே, தற்போதுள்ள பயணிகள் ஆட்டோரிக்ஷாக்களில் 3 பயணிகள் அல்லது 14 வயதுக்குட்பட்ட 5 சிறுவர் சிறுமியரை ஏற்றிச்செல்லலாம். இது மோட்டார் வாகனச் சட்டப்படி அதிக பாரமாக கருதப்படாது என்பதை தெரிவிக்கப்படுகிறது.

5. அரசாணை நகல் ஒன்று இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9